திரு. முனு ஆதி : தலைவரவர்களே, அவர் சொன்னதை வாபஸ் பெறுகிறாரா இல்லையா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நீங்கள் சபாநாயகருக்கு ஆணை இடக்கூடாது.

திரு. முனு ஆதி : நீங்கள் ஒரு பக்கமாக ஆணை இடுவது தான் தெரியுமே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வீராசாமி ஒரு பாயிண்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பினார்கள். இன்று காலையில் நானே அந்த பத்திரிகையைப் படித்துக் கொண்டிருந்தேன். அந்த பத்திரிகையைப் படித்துக் கொண்டிருக்கும் நேரத்திலே அந்த பத்திரிகை நிறுவனத்திலிருந்து எனக்கு போன் வந்தது. மாண்புமிகு உறுப்பினர் துரை முருகன் கூறியது போலவே அந்த பத்திரிகை நிருபர் அவர்கள், இப்படிப்பட்ட தவறு நடைபெற்றிருக்கிறது, நான் துரைமுருகன் அவர்களுக்குச் சொல்லலாம் என்று பார்த்தேன், அவர் இன்னும் உறங்கிக் கொண்டிருக்கிறார். என்றாலும் அவருக்கும் சொல்லிவிடுகிறேன். இப்படிப்பட்ட தவறு எப்படியோ நடந்துவிட்டது, திருத்தம் போட்டு விடுகிறோம், அவையில் இதைப்பற்றி கருத்துக்கள் வருமானால் எங்களைக் காப்பாற்றவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். இப்படி இந்த நிகழ்ச்சியைப் பொறுத்து அவர்கள் பொறுப்புணர்ச்சியோடு நடந்து கொண்டிருக்கிறார்கள், அந்த பொறுப்புணர்ச்சியை பாராட்டவேண்டும். ஆக, விழிப்புணர்ச்சியோடு இருக்குமாறு பத்திரிகையாளர்களை நான் கேட்டுக் கொள்கிறேன்.

(ஆ) அரசியல் சட்டத்தைப்பற்றி பேசுவது குறித்த பேரவைத் துணைத் தலைவரின் தீர்ப்பைத் திருத்துவது குறித்து.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, நேற்று அரசியல் சட்டத்தைப்பற்றி விவாதம் நடக்கிற போது அப்போது தலைமை வகித்த உதவி சபாநாயகர் அவர்கள் ஒரு தீர்ப்பு கொடுத்தார்கள். அந்தத் தீர்ப்பைப் பற்றி தாங்கள் புனராலோசனை செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்வதற்குக் காரணம், அவர் தீர்ப்பைப் பார்த்தால் அது ஒரு பிளாங்கட் லிபர்ட்டி மாதிரி என்று அரசியல் சட்டத்தில் இருக்கக் கூடிய ஒரு பிரிவை எடுத்துச் சொன்னார்கள். நம்முடைய விதி முறைகளிலே கிட்டத்தட்ட 10, 12 இடங்களிலே

1975 மார்ச் 7] [திரு. கே. டி. கே. தங்கமணி]

அரசியல் சட்டத்தினுடைய பல ஆர்ட்டிகிள்கள் குறிப்பிடப் பட்டிருக்கின்றன. ரூல் 52-ல் ஆர்ட்டிகிள் 179, ரூல் 8-ல், ஆர்ட்டிகிள்ஸ் 176, 175 இன்னும் ரூல் 15-இலே ஆர்ட்டிகிள் 190-ம் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. இன்னும் பல இடங்களில் விதிகளை விதிக்கின்ற நேரத்தில் அரசியல் சட்டத்தின் சில விஷயங்களுக்கு கட்டுப்பட்டிருக்கிறோம். அவருடைய ரூலிங் அதே நிலைமையில் இருக்குமானால் பொதுவாக எதையும் பேசலாம் என்ற நிலைமை ஏற்பட்டு விடும். எதையும் பேசலாமென்றால் கூடாது என்ற முறையில் தான் நம்முடைய விதிகளில்—ரூல்சில்கூட சிற்சில விஷயங்களில் இம்மாதிரி செய்ய வேண்டுமென்று போட்டிருக்கிறது. அவர் சொன்ன மாதிரி ரூலிங் இருக்குமானால் உறுப்பினர்கள் எதையும் பேசலாம் என்ற நிலைமை ஏற்பட்டு விடும். ஆகவே, இதைத் திருத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். நேற்றே இதை நான் ரெயிஸ் பண்ணவேண்டுமென்று நினைத்தேன். உங்கள் கவனத்திற்குக் கொண்டு வரவேண்டுமென்று பாயிண்ட் ஆஃப் ஆர்டர் என்ற முறையில் கொண்டு வந்திருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. தங்கமணி அவர்கள் எழுப்பிய பாயிண்ட் ஆஃப் ஆர்டருக்கு தீர்ப்பை பிறகு தெரிவிக்கிறேன்.

3. அறிவிப்பு.

1975-ஆம் ஆண்டு, இந்தியத் துறைமுகங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் நாடு 1975-ஆம் ஆண்டு, இந்தியத் துறைமுகங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன் வடிவை பேரவையில் அறிமுகம் செய்வதற்கும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

4. அரசினர் சட்ட முன்வடிவு.

1975-ஆம் ஆண்டு, இந்தியத் துறைமுகங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: பேரவைத் தலைவரவர்களே, 1975-ஆம் ஆண்டு, இந்தியத் துறைமுகங்கள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவை அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.